

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டம். கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திரசோழன் பிறந்த நாள் ஆடி திருவாதிரை விழாவினை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு , மு.பெ.சாமிநாதன் , இரா.இராஜேந்திரன் சா.சி.சிவசங்கர் ஆகியோர் துவக்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்கள். உடன் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல்.திருமாவளவன் . சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர்.க.மணிவாசன். . கலைப் பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி.கவிதா ராமு. . இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், . சுற்றுலாத் துறை இயக்குநர் கிறிஸ்துராஜ், , மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, , ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.க.கண்ணன் , அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஷ்வாஷ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி. மற்றும் பலர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் .இரா.இராஜேந்திரன் அரியலூர் மாவட்டம்,ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா திருத்தலத்தில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா துறை சார்பில் மேம்படுத்தும் பணிகளை நேற்று 23.07.2025 பார்வையிட்டு ஆய்வு மேற்க்கொண்டார். இந்தஆய்வின் போது சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் .தா.கிறிஸ்துராஜ் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! ரூ.145.41 கோடி மதிப்பீட்டிலான

# தாம்பரத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை - கூடுதல் மருத்துவக் கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்து தகவல்!

சென்னை, ஜுலை 24 -

முதலமைச்சர் வரும் 05.08.2025 அன்று ரூ.145.41 கோடி மதிப்பீட்டிலான மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை - தாம்பரம் மற்றும் கூடுதல் மருத்துவக் கட்டிடங்களை திறந்து வைத்து உரையாற்றுகிறார் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் பணிகள் நிறைவு பெற்று மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ள கட்டிடத்தினை ஆய்வு செய்தபோது தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (23.07.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சானடோரியம் பகுதியில் ரூ.145.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையினை மற்றும் கூடுதல் மருத்துவ கட்டிடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் தாம்பரம் பகுதியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமையும் என்று அறிவிக்கப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டது. முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இந்த கட்டிடம் என்பது 1971 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தாம்பரம் அரசு மருத்துவமனை என்கின்ற வகையில் தொடங்கி வைக்கப்பட்டது. 213 படுக்கை வசதிகள் கொண்ட தாலுகா மருத்துவமனையாக இது தரம் உயர்த்தப்பட்டது.

தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் 2021 மே திங்கள் 07 ஆம் தேதி முதலமைச்சராக பொறுப்பேற்றதற்கு பிறகு, தமிழ்நாட்டில் மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு வசதியாக புதியதாக 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவமனைகளும் அமைக்கப்படும் என்று அறிவித்து ரூ.1018.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள். நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் மாவட்ட அரசு மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருத்தணியில் கட்டி முடிக்கப்பட்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 2 மாதங்களுக்கு முன்னால் திறந்து வைத்தார்கள். அதற்கு அடுத்து தாம்பரத்தில் இருக்கக்கூடிய இந்த மருத்துவமனை தற்போது பணிகள் நிறைவு பெற்றுள்ளது. ரூ.110 கோடி செலவில் இந்த மருத்துவமனையில் கட்டுமான பணிகள் முடிவுற்றுள்ளது. இதற்கான மருத்துவ உபகரணங்கள் என்கின்ற வகையில் ரூ.5.38 கோடி செலவில் என்கின்ற வகையில் மொத்தமாக ரூ.115.38 கோடி மதிப்பீட்டில் இந்த மருத்துவமனையில் கட்டுமான பணிகள் முடிவுற்றுள்ளது. 213 படுக்கை வசதிகள் கொண்ட இந்த மருத்துவமனை தற்போது 400 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதில் 6 அறுவை சிகிச்சை அரங்குகள் அமையப் பெற உள்ளது. தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கூடிய இந்த மருத்துவமனையில் ஏறத்தாழ அனைத்து வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக அமைய உள்ளது.



2,27,320 சதுர அடி பரப்பில் கட்டி முடிக்கப்பட்ட இந்த மருத்துவமனை தரைத்தளத்தில் புற நோயாளிகள் பிரிவு கட்டிடம், விபத்து மற்றும் ரேடியோகிராபி கண்டறிதல், அதேபோல் புளுரோஸ்கோப்பி, எக்கோ போன்ற பல்வேறு வசதிகள் தரைதளத்திலும், முதல் தளத்தில் புற நோயாளிகள் பிரிவு, அவசரகால சிகிச்சை வார்டு, படுக்கை வசதிகள் என்று பல்வேறு வசதிகள் முதல் தளத்தில். இரண்டாம் தளத்தில் பிரசவத்திற்கு முந்தைய வார்டு, அவசரகால அறுவை சிகிச்சை வார்டு, அறுவை சிகிச்சைக்குப்பின் சிகிச்சை வழங்க கூடிய வார்டு போன்ற பல்வேறு வசதிகள் இரண்டாவது தளத்திலும், 3வது தளத்தில் 72 படுக்கைகள், டயாலிசிஸ், இரத்த வங்கி என்கின்ற வகையில் மூன்றாவது தளத்திலும், நான்காவது தளத்தில் 60 வார்டுகள், 400 படுக்கைகள் அமைக்கப்பட்டு இந்த மருத்துவமனையில் செயல்பட உள்ளது. ஐந்தாவது தளத்தில் 4 அறுவை சிகிச்சை அரங்குகள், அதோடு மட்டுமல்லாமல் தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள் 15, ஆஞ்சியோ படுக்கைகள் 12 என்கின்ற வகையில் 40 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு வசதிகளும் ஐந்தாவது தளத்தில் அமைய உள்ளது. 6வது தளத்தில் 107 படுக்கைகள், மருத்துவர் அறை, செவிலியர் அறை, பரிசோதனை அறை போன்ற பல்வேறு வசதிகள் இந்த தளத்தில் அமைய உள்ளது.

இவைகளையும் கடந்து சமையலறை, சலவையறை, நிர்வாக பிரிவு கட்டிடம், பிணவறை கட்டிடம் என்று பல்வேறு வசதிகளுடன் கூடிய கட்டிடமாக இது அமையவுள்ளது. இந்த கட்டிடத்தோடு இன்னொரு கட்டிடமும் அன்று பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இந்த மருத்துவமனையின் துணை கட்டிடமாக பல்வேறு வசதிகளை அதிலும் உருவாக்கம் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அருகில் ஏற்கனவே குரோம்பேட்டையில் இங்கிருந்து ஒரு அரை கிலோ மீட்டர் பக்கத்தில் அரசு மருத்துவமனையாக ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் அந்த மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் மிகப்பெரிய அளவில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகும் போது இந்த மாவட்டத்தின் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்களும், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் ராஜா அவர்களும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்த பகுதியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வேண்டும் என்கின்ற கோரிக்கையை ஏற்று இன்றைக்கு ரூ.115.38 கோடி செலவில் மிகப்பெரிய மருத்துவமனை அமைந்திருக்கிறது. இது தாம்பரம் மட்டுமல்ல சுற்று வட்டாரத்தில் உள்ள ஒட்டு மொத்த பொதுமக்களுக்கும் மிகப்பெரிய அளவில் பயன் பெற உள்ளது.

அதேபோல் ஏற்கனவே இருக்கின்ற அந்த அரசு மருத்துவமனையில் தற்போது ரூ.6.80 கோடி மதிப்பீட்டில் பல் மருத்துவ பிரிவு கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த கட்டிடத்தில் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ ரூ.7.10 கோடி மதிப்பீட்டிலான அந்த கட்டிடம் தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளார்கள். அந்தக் கட்டிடத்தையும் சேர்த்து ரூ.1 கோடி செலவில் ஆய்வக கட்டிடமும், அந்த கட்டிடத்தையும் முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளார்கள்.

ஆக மொத்தம் தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.115.38 கோடி மதிப்பீட்டிலான இந்த மருத்துவமனையும், ரூ.21.93 கோடி மதிப்பிட்டில் தனிமைப்படுத்தக்கூடிய வார்டு (Isolation Block) என்று சொல்லக்கூடிய கட்டடத்தையும், ரூ.1 கோடி மதிப்பிலான ஒருங்கிணைந்த ஆய்வக கட்டிடத்தையும், ரூ.7.10 கோடி மதிப்பிலான பல் மருத்துவ கட்டிடத்தையும் ஆக மொத்தம் ரூ.145.41 கோடி மதிப்பிலான மருத்துவக் கட்டிடங்களை வருகின்ற 05.08.2025 அன்று நேரிடையாக வருகை புரிந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உள்ளார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா (தாம்பரம்), இ.கருணாநிதி (பல்லாவரம்), தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலகண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நலவாழ்வு குழுமத் திட்ட இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மருத்துவர் ராஜமூர்த்தி, மண்டலக் குழுத் தலைவர்கள் தூ.காமராஜ், சு.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 20வது வார்டு பொதுமக்களின் அரசின் சேவைகள் திட்டங்களை அவர்கள் பகுதியிலேயே வழங்கிடும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ துவக்கி வைத்து பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்று உரிய துறைகளிடம் வழங்கினார் அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை இணை ஆணையர் உதவி ஆணையர்மாநகராட்சி அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்

# நெல்லை தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

நெல்லை, ஜுலை 24 -

கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைதளப் பயிற்சி, மாவட்ட கழகச் செயலாளர் அப்துல் வஹாப் தலைமையில், மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் பா.வில்சன் மணிதுரை வரவேற்புரை நிகழ்த்தனார். சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள தன்னார்வலர் விக்னேஷ் ஆனந்த் அவர்களும் பயிற்சி அளித்தனர். மாநகர அமைப்பாளர் கோட்டையப்பன் கருப்பசாமி நன்றியுரை நிகழ்த்தினார். மாறிவரும் அரசியல் சூழலுக்கேற்ப சமூக வலைதளத்தைப் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் இந்நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டது.



### சைதை கிழக்கு 169–வது வட்ட அவைத் தலைவர்

# அ.ஆரி விபத்துக்குள்ளாகி ராயப்பேட்டையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – துணை மேயர் மு.மகேஷ்குமார் நலம் விசாரித்தனர்!

சென்னை, ஜுலை 24 -

சைதை கிழக்கு 169-வது வட்ட அவைத் தலைவர் அ.ஆரி வாகனத்தில் சென்ற போது விபத்துக்குள்ளாகி ராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சைப் பெற்று வருகிறார். தகவல் அறிந்தவுடன் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவமனைக்கு விரைந்து நலம் விசாரித்து மருத்துவர்களிடம் சிகிச்சையை துரிதப்படுத்தினார்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதியில் அடங்கிய 169வது வட்டத்தின் அவை தலைவர் அ.ஆரி சமீபத்தில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது வேளச்சேரி சாலையில் (சிக்னல் அருகில்) கார் மோதி விபத்திற்குள்ளானார். இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனே அங்கிருந்த 169வது வட்ட கழக தோழர்கள் ராயப்பேட்டையில் அனுமதித்தனர்,

செய்தி அறிந்தவுடன் மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் மருத்துவமனைக்கு வந்து உடல் நலம் விசாரித்து மருத்துவர்களை அழைத்து சிகிச்சை முறையை கேட்டு சிகிச்சையை துரிதப்படுத்தினார்.

அதுபோது மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், வட்ட செயலாளர் எல்.ஆரோக்கியராஜ், மாவட்ட பிரதிநிதி இரா. சுதாபிரியன், வி.என்.செல்வமணி, சூரியன்பிரபு, ஜோ.சசிகுமார். ஆ.உதயசூரியன், ஆ.ரிச்சர்ட்சன், நா.சுரேஷ், இருந்தனர்.

மேலும் சென்னை பெருநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் மருத்துவமனைக்கு வந்து உடல் நலம் சிகிச்சை முறைகளை கேட்டறிந்தார். அவருடன் கழக தோழர்கள் கு.கார்த்திக் வந்திருந்தார். இதற்கு முன்பாக வட்ட துணை செயலாளர்கள், இரா.தமிழ்வாணன், துரைசரவணன், சைதை.ஆ.விக்டர், ஈ.மதனசேகரன், ஆ.தமிழரசன். சரத், கே.செந்தில், கே.கே. தவமணி, ஆ.தேவன், அர்ஜுன்பிரகாஷ், டி.நவீன், பி.டி.சி.ஜெயராமன், வி.சுரேந்திரன், மேஷாக், ஆர்.கவிதா, டி.கண்ணன், எஸ்.உமாநாத், குணா, வனஜா, மேகநாதன், K.ரமேஷ் மற்றும் பலர் மருத்துவமனை வந்து வட்ட அவைத் தலைவர் அ.ஆரியிடம் உடல் நலம் விசாரித்து, ஆறுதல் கூறினர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ விளக்க துண்டுப் பிரசுரம் மாணவர்களிடம் வழங்கல்!

## அமைப்பாளர் மு.குணசேகரன் தலைமையில் மாணவரணி நிர்வாகிகள் வழங்கினர்

மதுராநத்தம், ஜுலை 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ நிகழ்ச்சியின் மூலம் அனைவரையும் இணைக்கின்ற ஒரு பெரும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதனை சிரம் மேற்கொண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின் படி கழக மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி அறிவிப்பின்படி, மண்டல பொறுப்பாளர் ஜே ராமகிருஷ்ணன் வழிகாட்டுதலின்படி செய்யூர் தொகுதிக்குட்பட்ட சந்தோஷி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட சந்தோஷி நர்சிங் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு நேற்று (23.7.2025) ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சியினை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மு.குண சேகரன், மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சரளா தனசேகரன், சித்தாமூர் ஒன்றிய மாணவரணி மற்றும் மதுராந்தகம் ஒன்றிய மாணவரணி நிர்வாகிகள் ஏற்பட்டில் சித்தாமூர் ஒன்றிய பெருந்தலைவர் தி ஏழுமலை, சித்தாமூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிற்றரசு, மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் நாகப்பன், கிளை செயலாளர் வீரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் லோகநாதன், கண்ணன், தனசேகரன், மாணவரணி நிர்வாகிகள் லோகநாதன் முரளி பிரபாகரன் ஸ்ரீகாந்த் புருஷோத்தமன் விமல் மேகநாதன் பவித் அரவிந்த் ராஜா

உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ நிகழ்ச்சியின் மூலம் அனைவரையும் இணைக்கின்ற ஒரு பெரும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அதனை சிரம் மேற்கொண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. வழிகாட்டுதலின்படி செய்யூர் தொகுதிக்குட்பட்ட சந்தோஷி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட சந்தோஷி நர்சிங் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு நேற்று (23.7.2025) ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி யினை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மு.குண சேகரன், மற்றும் துணை அமைப்பாளர் சரளா தனசேகரன், சித்தாமூர் ஒன்றிய மாணவரணி மற்றும் மதுராந்தகம் ஒன்றிய மாணவரணி நிர்வாகிகள் ஏற்பட்டில் தி ஏழுமலை, சிற்றரசு, சிவக்குமார், நாகப்பன், வீரன், லோகநாதன், கண்ணன், தனசேகரன் உள்ளிட்ட மாணவரணி நிர்விகிகள் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.